மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# காப்பியத்தில் மனிதநேயப் பதிவுகள்

**முனைவர் கோ.ஜெகதீஸ்வரி**
தமிழாய்வுத் துறை,
கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோவை

ஆழி சூழ் உலகினில் மிகவும் வல்லமை வாய்ந்த சக்தி அன்பு ஒன்றேயாகும். அத்தகைய அன்பு விலை மதிக்க இயலாத அணிகலனாக விளங்குகிறது. "அன்பைவிடப் பணிவினைத் தரவல்லது என வேறு எதனையும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது" என்பார் காந்தியடிகள். அன்பே, பாசமாக, காதலாகக் கருணையாக, மனிநேயமாக வளர்ச்சி அடைகிறது. உயர்ந்த மனித நேயமே உலகில் உள்ள எல்லா உயிரினங்களைவிட மனித சமுதாயத்துக்கு வேண்டப்படுவதாக உள்ளது.

மனிதநேயம் என்பது "மனித உலக வாழ்க்கை இயல்", மனித இனநலக்கோட்பாடு" என்று பல்வேறு விளக்கங்களை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மனித சமுதாயம் நலமுடன் வாழ வேண்டப்படும் மனிதநேயமானது, ஒழுக்கத் தத்துவ முறைகளைச் சிந்திப்பதாலும், வரலாற்றையும் இலக்கியத்தையும் படிப்பதாலும், தன்னுடைய சொந்த அனுபவத்தால் பெற்றுக்கொள்ளமுடிகிறது. நேயச் சிந்தனையை உலகிற்கு உணர்த்துவதற்காகவே தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களில் இரட்டைக்காப்பியங்களின் வழி பெறப்படும் மனிதநேய

சிந்தனைகளை நிரல்படுத்திப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. இரட்டைக் காப்பியத்தில் சிலப்பதிகார கதைப்போக்கு வேறு மணிமேகலைக் கதைப் போக்கு வேறு. ஆனால் இரண்டுக்கும் தொடர்பு உண்டு. சிலப்பதிகாரம் சமுதாயத்தில் உயர்ந்த செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தின் கதை. மணிமேகலையோ சமூகச் சீர்கேடாக நினைக்கும் பரத்தையர் குலத்தில் தோன்றிய மகளைப் பற்றிய கதை. சிலப்பதிகாரம் "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றம்" என்னும் கருத்தை அடிப்படையாகச் சமூகநேயத்தை மிகுதியும் வலியுறுத்துகிறது. மணிமேகலையில் அரசியல்அறத்தை நேயத்தைக் கூறியிருந்தாலும், மனிதனின் அடிப்படைத் தேவைகளின் நிறைவினால் சமுதாயத்தில் மனிதநேயம் நிலைத்திருக்கும் என்ற கருத்தை எடுத்தியம்புகிறது.

### சிலப்பதிகாரம் காட்டும் மனிதநேயம்

தனிமனிதனின் மனிதநேயமே சமுதாய நேயமாக உலக நேயமாக மலர்கிறது. சிலப்பதிகாரத்தின் தலைமைப் பாத்திரங்கள் வழி நேயச்சிந்தனை வெளிப்படக் காணலாம். கோவலன் புகார் நகரில் மன்னருக்கு இணையாக வைத்துப் பார்க்கும் உயர்ந்த வணிகர் குடியில் பிறந்தவன். இவன் சிறந்த மனிதநேயச்சிந்தனை மிக்கவன் என்பதற்குப் புகார் காண்டத்து எந்தச் செய்தியும் இல்லை. ஆனால் மதுரைக்காண்டத்தில் தலைச்செங்கானம் என்ற ஊரைச் சேர்ந்த நான்கு வேதம் அறிந்த/ நன்மையையே விரும்பும் அந்தணனான மாடலன் வாயிலாக இளங்கோவடிகள் இதனை உணர்த்துகிறார்.

"கடக்களிறு அடக்கிய கருணைமறவ"

(சிலம்பு, அடைக்கலக்காதை, பாடல் வரி. 53)

கோவலன் தன் கருணை உள்ளத்தின் காரணமாகக் கூனுடைய மறையோனைத் தாக்கிய மதங்கொண்ட யானையை அடக்கி அவனைக் காத்து, உயிர்களிடம் கொண்ட இரக்கம் காரணமாக யானையைக் கொல்லாதுவிட்ட கருணை உள்ளம் கொண்டவன் என்றும் அதே போன்று,

"கான் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ"

(சிலம்பு அடைக்கலக்காதை வரி. 73-75)

கீரிப்பிள்ளையைத் தன் பிள்ளையாக ஒரு மறையவன் வளர்த்து வந்தான். அவன் மனைவி அதனைக் கொன்றாள். உடனே அவனைப் பிரிந்து காட்டில் வாழ்ந்தான். அவர்களின் பாவம் தொலைய நிறைய செல்வம் கொடுத்து அவர்களைச் சேர்த்து வாழவைத்தான். அத்தகைய உயர்ந்த உள்ளம் கொண்டவன் கோவலன். மேலும்,

"பற்றிய கலைஞரின் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்"

(சிலம்பு அடைக்கலக்காதை வரி. 89-90)

பொருளுக்காக ஒருவன் பத்தினிப் பெண்ணுக்கு பழி ஏற்படுமாறு அவள்

கணவனிடமே சென்று பொய் கூறினான். தவறு செய்தவர்களைப் பாசக் கயிற்றால் பற்றி அறைந்து உண்ணும் பூதம் ஒன்று பொய் கூறியவனைத் துன்புறுத்தியது. அதைக் கண்டு அவன் தாய் துடித்தனள். உடனே கோவலன் அந்தத் தாயின் வேதனையைப் பொறுக்கமுடியாமல் பூதத்திடம் சென்று தன் உயிரை எடுத்துக்கொண்டு, அவனை விடுவிக்கும்படி கேட்டான். அதற்கு பூதம்,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங்கு இல்லை"

(சிலம்பு, அடைக்கலக்காதை, வரி. 84-85)

என்று கூறியது. தவறு செய்வதனை அறைந்து கொன்றது. செயலற்று இருந்த தாயோடு கோவலன் சென்று அவனின் சுற்றத்தையும் பசிப்பிணியின்றிப் பல ஆண்டுகள் காத்த உயர்ந்த மனம் கொண்டவன். மேற்கண்ட சான்றுகள் வாயிலாக கோவலன் சிறந்த மனிதநேயம் மிக்கவன் என்பது தெளிவு.

கோவலனுக்குப் பொற்கொல்லனான கள்வன் செய்த கொடுமை மனிதநேயமற்ற செயலாகும். அதுபோன்றே பாண்டிய மன்னன் "வினைவிளைக் காலம் ஆதலால்" என்று ஆசிரியர் அரசன் செயலை நியாயப்படுத்தினாலும், அவன் ஆராயாமல் கூறிய தீர்ப்பும் மனிதநேயமற்ற செயலேயாகும். கோவலனை ஊழ்வினையின் காரணமாக இறப்பு அவனைச் சூழ்ந்தது என்று ஆசிரியர் கூறுகின்றார். கண்ணகி தன் முற்பிறப்பிலும் சரி இந்தப் பிறப்பிலும் சரி எந்தத் தவறும் செய்யாதவள். பிறப்பிலேயே உயர்ந்த ஒழுக்கமும், பண்பும் உடையவள். அத்தகைய தெய்வத்தன்மை பொருத்திய கண்ணகி கோவலனின் இறப்பினுக்குப் பின்பு அவன் உடலைக் கண்டு அவள் படும் துன்பம், கற்போர் நெஞ்சைக் கரைந்தோட வைக்கிறது.

"கொண்டகொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்"

(சிலம்பு, ஊர்சூழ்வரி, வரி. 55-60)

கண்ணகி, கோவலன் மனைவி என்ற ஒரு காரணத்திற்காக அவளுக்கு இத்தகைய துன்பமும் மனிதநேயமற்ற செயலும் நடந்துள்ளன என்று எண்ண வேண்டி உள்ளது. கண்ணகியின் மனிதநேயப் பண்பையும் கருணையும் இரு இடங்களில் வெளிப்படக் காணலாம். கோவலன், கண்ணகி, கவிந்தி மூவரும் மதுரைக்குச் செல்லும் வழயில் தென்கரை பூம்பொழிலில் தங்கியிருந்தபோது, வம்பப்பரத்தையும், வறுமொழியாளனும், "காமனும் தேவியும் போன்ற இவர்கள் யார்? ஏன வினாவினார். அதற்குக் கவுந்தியடிகள், "இவர்கள்எம் மக்கள்" என்று கூறக்கேட்டு கற்றறிந்தீர் உடன் வயிற்றீர்

ஒருங்குடன் வாழ்க்கை நடத்துவதுண்டோ?'' என அவர்கள் வினவினர். அது கேட்ட கண்ணகி நடுக்குதுயர் அடைந்தாள். உடனே கவுந்தி தன் தவ வலிமையால் முதுநரிகளாகுக எனச் சபித்தார். அதற்குக் கண்ணகி கோவலன் இருவரும் வருந்தி ''செய்தவத்தீர் நெறியில் நீங்கியோர் நீரல கூறினும் அறியாமையால் என்று அறிதல் வேண்டும் ஆகையால் அவர்களுக்கு உய்திக்காலம் உரைக்க வேண்டும் என்று வேண்டி. தன்னை காயப்படுத்தியவர்களுக்கு'' இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் உயர்ந்த நேயப்பண்பே மனிதநேயத்துக்குச் சான்றாகும்.

கோவலன் இறந்துபட்ட பின்பு கண்ணகி மதுரையை எரித்து அழிக்கிறாள். எரியும் அக்கினிக்கு அவள் இடும் கட்டளை அவளின் தெய்வத்தன்மைக்குச் சான்றாகும்.

''பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்கென்று காய்த்திய''

(சிலம்பு, அழற்படுகாதை, வரி. 53-55)

மேற்கண்ட பாடலில் கண்ணகியின் தாய்மையுள்ளம் வெளிப்பட்டுள்ளது.

காந்தியடிகள் சிறந்த மனிதநேயப் பாத்திரமாகும். புகாரிலிருந்து மதுரைக்கு கண்ணகி கோவலனை அழைத்து வந்து அவர்களைப் பேணாமல், நெறிப்படுத்தாமை தம் குற்றமோ என உள்ளம் வருந்தினார். மனம் வருந்தி சோறின்றி உடல் வருந்தி உயிர்விட்டார்.

''தவத்திரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீனில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசாலாட்டி
என்னோடு இவர் வினையுறுத்தோ என
உண்ணா நோன்போடு உயர்பதிப் பெயர்ந்ததும்''

(சிலம்பு, நீர்படைக்காதை, வரி. 79-88)

என்ற பாடலின் வாயிலாக தன்னால் காக்க இயலாது போனதும் தான் அவர்களின் இறப்புக்குக் காரணம் என்றும் எண்ணி வருந்தி தன்னைத்தானே வருத்திக்கொண்ட மன உணர்வைக் கவுந்தி பாத்திரத்தினால் உணரலாம்.

மதுராபதி தெய்வம் கண்ணகியைக் கண்டு பாண்டியரின் குடிப்பிறப்பைப் பற்றிக் கூறும் இடத்தில் பாண்டிய மன்னர்கள் பண்புள்ளம் உடையவர்கள் என்று விளக்கிச் செல்கிறார். பேரரசன் என்றாலும் சக மக்களை மதிக்கின்ற உயர்ந்த நேயத்தை உடையவர்கள் பாண்டியர்கள் என்பதை பராசரன் வார்த்திகன் கதைமூலம் உணர்த்துகிறார்.

''கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்
இரு நில மடந்தைக்குத் திருமார்பு நல்கியவன்''

(கட்டுரை காதை, 119-120)

என்று பாண்டியரின் நேயப்பண்பை உணர்த்துகிறார். இவைதவிர இளங்கோவடிகளின்

அறவுரை சமுதாயத்தில் மனிதநேயத்தை நிலைநிறுத்தம்,

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பெய்யுரை அஞ்சுமின் புறங்கூறப் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்பின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்கலம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிரைத்துப் பெயர்மின்
பிறர்மனை அ¨சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொரியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈ§கென்"

(வரந்தருகாதை, வரி. 190-200)

மேற்கூறிய அறவுரை சமுதாயத்தில் மனிதநேயம் மலர அடிப்படையாகும். இவற்றைப் பின்பற்றி இன்னலற்ற வாழ்வைச் சமுதாயம் வாழ வேண்டும் என வலியுறுத்துகிறார்.

**மணிமேகலை காட்டும் மனிதநேயம்**

சிலம்பு காட்டும் மனிதநேயம், மணிமேகலை காட்டும் மனிதநேயம் கருத்துக்களுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. சமுக அறத்தைக் காப்பதிலும் அரசநீதியிலும் ஒரே சிந்தனை உடையன. அரசன் நீதியிலே நின்று ஆளவேண்டும். ஆட்சி அறநெறியில் நிற்காவிட்டால் நாடு நலிவடையும், நாட்டில் நன்மையான எச்செயலும் நடைபெறாது. வறுமையற்ற, அடிப்படை தேவைகள் நிறைவடைந்த சமுதாயத்தில் தான் மனிதத்தன்மையே நிலைத்து நிற்கும். பசிப்பிணி என்ற பாவி காட்சி செய்யும் நாட்டில் நிச்சயம் ஒழுக்கம் நிலைக்காது. இன்பத்துக்கு இடமே இல்லை. அதனால் எவ்வுயிர்களையும் பட்டினிக்கு ஆளாக்காமல் மக்களைக் காப்பதே ஆட்சியாளனின் பொறுப்பு என மணிமேகலை எடுத்துரைக்கிறது. கதைத் தலைவி மணிமேகலை முழுக்க நேயப்பண்பை உலகிற்கு உணர்த்தும் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். துறவு பூண்ட மணிமேகலை தான் கொண்ட கடவுள் புகழை மட்டும் பாடிப்

போற்றித்திரியவில்லை. வருத்தப்படுபவர்க்கு உணவிடுவதையே தன் கடமையாகக் கொண்டிருந்தாள். நாடு, மொழி, இன, மன பேதமின்றி எல்லா மக்களையும் பட்டினிக் கொடுமையிலிருந்து காத்தாள்.

மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத் தீவிற்குச் சென்ற மணிமேகலை பழம்பிறப்பை உணர்கிறாள். பாத்திரம் பெற்ற காதையில் தீவதிலகையை சந்திக்கிறாள். அவள் இந்திரன் ஏவலால் புத்தபீடிகையைக் காத்து வருவதாகக் கூறுகிறாள். தீவதிலகை மேலும் கோமுகி என்ற பொய்கையில் அமுதசுரபி என்ற பிச்சைப் பாத்திரம் அமிழ்ந்து கிடப்பதையும், அது புத்தர் அவதார தினமான புத்த பூர்ணிமை அன்று வெளித்தோன்றும் என்கிறாள். அமுதசுரபியைப் பெற்று உலகில் பசிப்பிணியை போக்குக என அறிவுருத்துகிறள். அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலையிடம் தீவதிலகை,

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாப்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

(மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, வரி. 96-97)

உணவு கொடுப்பது உயிர் கொடுப்பது போன்றது என்ற உயர்ந்த நேயத்தை வெளிப்படுத்துகிறார். அதற்கு மணிமேகலை இன்றே உயிர்களைப் பசிப்பிணியிலிருந்து இந்த அமுதசுரபி கொண்டு வறுமையுற்றவரைத் தாயாக இருந்து தாங்குவேன் என்று மறுமொழி கூறுகிறாள். "காயசண்டிகையின் யானைத் தீ" என்றும் கொடிய பசியை நீக்கினாள். சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றினாள். பசிப்பிணி என்பது ஒரு பாவி அதைப் போலக் கொடுமை செல்வது வேறு ஒன்றுமில்லை. பசி வந்தால் மனிதனின் பத்து பண்புகளையும் இழபான் என்பதைப் பசிவந்தால் பத்தும் பறக்கும் என்பர். இதனைச் சாத்தனார்

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்வி பெரும்புணை விடுஉம்
நாண்அணி களையும் மாண் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடும் புறம்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்றும் பாவி

(பாத்திரம் பெற்ற காதை, வரி. 76-80)

என விளக்குகிறார். பசியின் கொடுமையை,

"அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருத்தாத நாய் ஊண்தின்னுதல் உறுவோன்"

(பாத்திரம் பெற்ற காதை, வரி. 82-91)

என்று விசுவாமித்திர முனிவர் நாய்க்கறியை உண்ணத் தொடங்கிய கொடுமையை மணிமேகலை கூறுகிறது. அரசி இராசமாதேவி தன் மகன் இறப்புக்கு மணிமேகலையே காரணம் என்று கருதி அவளைச் சிறைவீடு செய்து துன்பப்படுத்தத் திட்டமிட்டாள்.

இராசமாதேவி மணிமேகலைக்குப் பித்தாக்கும் மருந்தைக் கொடுத்தார். அவளின்

கற்புநலனை அழிக்க கல்லா இளைஞனை அழைத்துவந்தாள், புழுக்கறையில் அடைத்துப் பட்டினி போட்டாள். ஆனால் மணிமேகலைக்கு ஆபத்து எதுவும் உண்டாகவில்லை.

"மயல்பகை வாட்டினை மறுபிறப்பு யுணர்ந்தன்
அயர்ப்பது செய்யா அறிவினேன் ஆயினேன்
கல்லாக் கயவன் கார்இருள் தான்வர
நல்லாய் ஐ ஆண் உருநான் கொண்டிருந்தேன்
ஊண்ஒழி மந்திரம் உடைமையாயின்
அன்றோ மாண் இரை் செய்த வஞ்சம் பிழைத்தது?"

(சிறைவிடுகாதை, வரி. 92-97)

அரசி இராசமாதேவி மணிமேகலைக்குச் செய்த கொடுமைகள் அனைத்தும் மனிதநேயமற்ற செயல்களாகும். இவற்றை அன்புடன் பொறுத்துக்கொண்டாள்.

அரசனுடைய பாதுகாப்பு இல்லாவிட்டால் நீதி நிறைந்த ஆட்சி இல்லாவிட்டால், சமுதாயத்தில் நேயமற்ற செயலே நடைபெறும் என்பதை

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்று எனில் இன்றாம்"

(சிறைசெய்காதை, வரி. 208-209)

ஒரு அரசன் தன் நாட்டை நேர்மையுடன் ஆட்சிசெய்யவில்லை என்றால் எத்தகைய நடைபெறும் கொடுமைகள் பின்வருமாறு:

"ஆள்பவர் கலங்குற மயங்கிய நல்நாட்டுக்
காமுக மடந்தை, கணவனும் கைவிட
ஈன்ற குழவியொடு தான்வேவ ஆகி
மான்வ ஓர்திசைபோய் வரையாள் வாழ்வுரிப்
புதல்வன் தன்னை ஓர்புரிநூல் மார்பன்
புதியதோர் அறியாப் பான்மையில் வளர்க்க
ஆங்கு அப்புதல்வன் அவள் திறம் அறியான்
நான் புணர்ந்து அறிந்துபின் தன் உயிர் நீத்தலும்"

(சிறைபடுகாதை, வரி. 104-111)

கொடுங்கோல் நிலவும் நாட்டில் மக்களிடம் நேயப்பண்பை காண இயலாது. வறுமையில் வாடும் மக்களிடம் இன்றும் மனிதநேயமற்ற செயல் வெளிப்படும்

நேயச்சிந்தனைக்கு எதிரானதாக இவ்வுலகம் வெறுத்து ஒதுக்கும் ஐந்து குணங்கள். ஒவ்வொரு மனிதனும் களைய வேண்டுவது. கள் உண்ணல், பொய் புகலுதல், களவாடுதல், கொலைசெய்தல், காமவெறி கொள்ளுதல் என்பதை,

"முடிபொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்

கடிய பட்டன ஐந்துஉள அவற்றில்
கள்ளும், பொய்யும், களவும் கொலையும்
தள்ளாதாகும் காமம், தம்பால்,
ஆங்கது கடிந்தோர் அல்லவை கடிந்தோர்"

(சிறைசெய் காதை, வரி. 169-173)

மேற்சொல்லப்பட்ட ஐந்தும் பஞ்சமா பாதகங்கள் என்பர். இவ்வைந்து பாவங்களையும் உணர்த்துகின்றனர்.

நேயம் ஒன்றே அடிப்படை. பிறப்பால் மனிதர்களிடையே வேற்றுமை இல்லை என்பதை மணிமேகலை ஆபுத்திரன் கதை மூலம் விளக்குகிறது.

அந்தணர்கள் ஆபுத்திரனை இகழ்ந்தனர். அன்பும், அறிவும் உள்ளவனே உயர்ந்த மனிதன் ஆவான்.

"வான்மகன் அசலன், மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி, புரையோர் போற்று
நுரிமகன் அல்லனோ கேச கம்பளன்?
ஈங்கு இவர் நும் குலத்து இருபி கணங்கர் என்று
ஓங்கு உயர் பெரும் சிறப்பு உரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ?
நூன்மறை மார்க்கன் நன்னூல் அகத்து"

(ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, வரி. 63-69)

அசலன் என்பவன் பசுவின் மகன். சிருங்கி மானின் மகன். விரிஞ்சி புலிபுத்திரன். பெரியோர் போற்றும் கேசகம்பளன் நரியின் மகன். முனிவர் கூட்டம் இவர்களைப் புகழ்ந்து பேசுகிறது. பிறப்பில் வேற்றுமை இல்லை என்று கூறுகிறான். ஒழுக்கமே உயர்ந்த குலம் என்று நிறுவுகின்றான்.

## தொகுப்புரை

ஒருவனது உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் அவனது நடத்தையே காரணமாகிறது. தன்னலமற்றவர்களாக மக்கள் வாழப் பணி செய்பவராக இருப்பவர்களே உயர்ந்த மனிதர்கள். மனிதநேயம் மிக்கவனே உயர்ந்தனாக கருதும் சமுதாயம், தனி மனித ஒழுக்கத்துக்கும் சமுதாய ஒழுக்கத்துக்கும் மனிதநேயப் பண்பு அவசியம். அத்தகைய நேயப் பண்பு அனைவர் நிலைத்திட சிறந்த அரசனின் செங்கோலாட்சியும் அவனால் நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகளும் முக்கியப்பங்கு வகிக்கின்றன.